இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DIGITAL SKILLS for LIFE

# குடிமக்களுக்கான சேவைகள்




கீழே உள்ள QR குறியீட்டை
ஸ்கேன் செய்து இணையவழிப்
பரிவர்த்தனைகளை
கற்றுக்கொள்ள முடியும்

GO gov.sg

இதற்கான ஆதரவு
DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD

SMART NATION SINGAPORE

# உள்ளடக்கம்

முகப்புரை 2

சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் 3

பொதுவான மின்னிலக்க அரசாங்கச் சேவைகளின் செயலிகளைப் புரிந்துகொள்ளுதல் 4

Singpass செயலியைப் பயன்படுத்துவதற்கான படிப்படியான வழிகாட்டுதல் 7



# முகப்புரை

வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்கள் (DSL) வழிகாட்டிப் புத்தகம் என்பது தினசரி வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களைக் கற்றுக்கொள்ள உதவும் சிற்றேடுகளின் தொகுப்பாகும். இது, டிஜிட்டல் உலகில் நீங்கள் நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் இருப்பதற்காக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியபடிப்படியான வழிமுறைகள் மற்றும் விரைவான உதவிக்குறிப்புகளைப் பற்றி விளக்குகிறது.

தினசரி வாழ்க்கைக்குத் தேவைப்படும் டிஜிட்டல் திறன்களை கற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்காகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.


இந்த DSL திறன்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி 5 திறன்களைக் கொண்ட பகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

**கற்றல் விளைவுகள்:**

இந்த வழிகாட்டிக் கையேடு 'இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்' திறன் மீது கவனம் செலுத்துகின்றது, இதில் நீங்கள் கற்றுக்கொள்வது:

- பொதுவான மின்னிலக்க அரசாங்கச் சேவைகள், அதன் ஐகான்கள் மற்றும் அவற்றின் சின்னங்களைப் பயன்படுத்தி அவற்றை அடையாளம் கண்டறிதல்.
- Singpass செயலியைப் பயன்படுத்துவதன் பொதுவான அம்சங்கள் (UI) மற்றும் பொதுவான படிகள் (UX), அதன் அமைப்புகளை நிர்வகித்தல் மற்றும் பிற அரசாங்கச் சேவைகளை அணுகுவதற்கு அவற்றைப் பயன்படுத்துதல்.
- இணையதளத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கான பயனுள்ள இணையவழிப் பாதுகாப்புக் குறிப்புகள்.

DSL




**இணையவழித் தளங்களில் பாதுகாப்பாக, விவேகமாக, கனிவாக இருத்தல்**
இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாப்பாக இருங்கள்; தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; இணையத்தில் நேர்மறையாக இருக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**தகவல்களை இணையவழித் தளங்களில் ஆராய்தல்**
இணையத்தில் தகவல்களைத் தேடவும், பார்க்கவும் மற்றும் மீட்டெடுக்கவும்.



**இணையவழித் தளங்களில் தொடர்புகொள்ளுதல்**
இணையத்தில் மற்றவர்களுடன் இணையவும்.



**இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்**
இணையத்தில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும்.



**அறிவார்ந்த சாதனங்களை நிறுவி, பயன்படுத்துதல்**
உங்கள் மொபைல் சாதனத்தின் அடிப்படை வன்பொருள் மற்றும் மென்பொருள் செயல்பாடுகளை அமைத்து இயக்கவும்.




இந்த வழிகாட்டி பொதுவான மென்பொருள் சின்னங்கள் மற்றும் மொபைல் சாதன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. சில அம்சங்கள் மற்றும் பயனர் இடைமுகம் வெவ்வேறு கைப்பேசிகளின் வேறுபடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள்

செயலியைப் பயன்படுத்தும் போது பாதுகாப்பாக இருக்க, பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்கவும்:




குறுஞ்செய்தி, செய்தி பரிமாற்ற செயலிகள் (எ.கா. வாட்ஸ்அப் அல்லது டெலிகிராம்) அல்லது பிற அதிகாரப்பூர்வமற்ற சேனல்கள் மூலம் வேறொருவர் உங்களுக்கு அனுப்பும் Singpass QR குறியீட்டை **ஸ்கேன் செய்ய வேண்டாம்**. நீங்கள் உள்நுழைய விரும்பும் மின்-சேவையின் **அதிகாரப்பூர்வ இணையதளத்தில்** உள்ள Singpass QR குறியீட்டை மட்டுமே ஸ்கேன் செய்யவும்.




உங்கள் Singpass ஐடி, கடவுச்சொல் மற்றும் 2FA விவரங்களை மற்றவர்களுடன் **பகிர்ந்து கொள்ளாதீர்கள்**, ஏனெனில் இதை வைத்து உங்கள் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை உங்கள் அங்கீகாரம் இல்லாமல் பிறர் அணுகலாம்.




Singpass QR குறியீட்டை ஸ்கேன் செய்தப் பிறகு, உங்கள் Singpass செயலியின் ஒப்புதல் பக்கத்தில் காட்டப்படும் **URL டொமைன்** உங்கள் உலாவியின் முகவரிப் பட்டியில் நீங்கள் பார்ப்பவற்றுடன் பொருந்துகிறதா என்பதை எப்போதும் சரிபார்க்கவும். இல்லையெனில் மேற்கொண்டு தொடர வேண்டாம்.




உங்கள் தனிப்பட்ட சாதனத்தில் மட்டுமே **உங்கள் கைரேகை, முகத் தரவு மற்றும் கடவுக்குறியீட்டை பதிவு** செய்யவும்.




உங்கள் பரிவர்த்தனைகளை முடித்தவுடன், எப்போதும் அரசாங்க மின்னிலக்க சேவையிலிருந்து (எ.கா. CPF, IRAS, HealthHub) **வெளியேறவும்**.

# பொதுவான மின்னிலக்க அரசாங்கச் சேவைகளின் செயலிகளைப் புரிந்துகொள்ளுதல்


| | |
|---|---|
| Singpass செயலி பற்றி | பக்கம் 5 |
| மின்னிலக்க அரசாங்கச் சேவைகளுக்கான செயலிகளில் காணப்படும் பொதுவான அம்சங்கள் | பக்கம் 6 |


# Singpass செயலியைப் பற்றிய தகவல்

Singpass என்பது ஒவ்வொரு சிங்கப்பூர் குடியிருப்பாளரின் நம்பகமான மின்னிலக்க அடையாளமாகும். இந்தச் செயலியின் மூலம், அரசு மற்றும் தனியார் துறை சேவைகளை இணையத்தில் எளிதாகவும் பாதுகாப்பாகவும் அணுகலாம்.

### செயலியைக் கற்றுக்கொள்வதற்கு முன்பு தேவையானவை

### கற்பவரிடம் பின்வருபவை கண்டிப்பாக இருக்க வேண்டும்:

- மொபைல் சாதனம்(iOS அல்லது Android) இருக்க வேண்டும், வேலை செய்யும் புகைப்படக்கருவியுடன் அது செல்லுலார் நெட்வொர்க் அல்லது Wi-Fi உடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- செல்லுலார் நெட்வொர்க் அல்லது Wi-Fi உடன் இணைப்பது எப்படி என்பதை அறிந்திருக்க வேண்டும்.
- மொபைல் சாதனத்தில் செயலியை எவ்வாறு நிறுவுவது என்பதை அறிந்து வைத்திருக்க வேண்டும்.
- Singpass கணக்கிற்குப் பதிவுசெய்து 2FAஐச் செயல்படுத்தியிருக்க வேண்டும். உங்களிடம் Singpass கணக்கு இல்லையெனில், அவற்றுக்குப் பதிவுசெய்து 2FAஐ அமைப்பதற்கான படிகளைப் பின்பற்ற QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



# அரசாங்க டிஜிட்டல் சேவை செயலிகள் உள்ள பொதுவான அம்சங்கள்




**முகப்பு சின்னம்**
செயலியின் முதன்மை முகப்புப் பக்கத்தை அணுகுவதற்கு.





**"வருடல் செய்யவும்" ஸ்கேன் சின்னம்**
அரசாங்கத்தின் டிஜிட்டல் சேவைகளைப் பெறுவதற்கான அதிகாரப்பூர்வ Singpass




**"செய்தி பெட்டி" இன்பாக்ஸ் சின்னம்**
அரசாங்கத்தால் அனுப்பப்படும் முக்கியமான தகவல்களைப்



**செயலியில் உள்ள அமைப்புகள் சின்னம்**
செயலியின் அமைப்புகளை உங்கள் விருப்பப்படி திருத்துவதற்கு (எ.கா. அறிவிப்பு அமைப்புகள்).



**கூடுதல் விருப்பத்தேர்வுகள்**
செயலியில் கிடைக்கும் பிற விருப்பத் தேர்வுகளை அணுகுவதற்கு உங்களை அனுமதிக்க.



**தகவல்களைக் காணுதல் அல்லது மறைத்தல்**
செயலியிலிருந்து முக்கியமான தகவல்களை மறைக்க மற்றும் நீங்கள் விரும்பினால் மட்டுமே அவற்றைப் பார்க்க அனுமதிக்க.


# Singpass செயலியைப் பயன்படுத்துவதற்கான படிப்படியான வழிகாட்டுதல்


| | |
|---|---|
| Singpass செயலியை அமைப்பது எப்படி | பக்கம் 8 |
| Singpass செயலியில் உள்ள ஐகான்கள், செயல்பாடுகள் மற்றும் அமைப்புகள் | பக்கம் 11 |
| Singpass செயலியில் இருந்து பிற அரசாங்கச் சேவைகளை அணுகுவது எப்படி | பக்கம் 19 |

# Singpass செயலியை அமைக்கவும்




## 1 Singpass ஐ துவக்கவும்



**"Singpass"** செயலியைத் துவக்கவும்

## 2 விதிமுறைகள் & தனியுரிமை





**"Terms & Privacy"** அறிக்கையைப் படித்து, தொடருவதற்கு ஒப்புக்கொள்ளவும்.

## 3 முக சரிபார்ப்பு என்பதைத் தேர்ந்தெடுக்கவும்





Singpass செயலியின் ஒரு விரைவான மேலோட்டத்திற்கு இடதுபுறமாக ஸ்வைப் செய்யவும் அல்லது **"அடுத்து"** என்பதைத் தட்டவும்.

## 4 Singpass இல் உள்நுழைக





உங்கள் Singpass ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி உங்கள் Singpass கணக்கில் **உள்நுழைக**.

## 5 ஒரு முறை கடவுச்சொல்லை உள்ளிடுக (OTP)




எஸ்.எம்.எஸ் மூலம் அனுப்பப்பட்ட **ஒரு முறை கடவுச்சொல்லை** (OTP) உள்ளிடவும்.

## 6 Continue என்பதைத் தட்டவும்





Singpass **“Face verification”** என்பதைத் தொடர **"Continue"** என்பதைத் தட்டவும்.

## 7 சான்றிதழ் விவரங்களை உறுதிப்படுத்தவும்





தேர்வுப்பெட்டிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் உங்கள் சான்றிதழ் விவரங்களை உறுதிப்படுத்தவும். **"தொடரவும்"** என்பதைத் தட்டவும்.

## 8 6-இலக்க கடவுக்குறியீட்டை அமைக்கவும்




## 9 முக ஐடியை இயக்கவும்





உங்கள் கைரேகை அல்லது முகத்தைப் பயன்படுத்தி உள்நுழைய பயோமெட்ரிக் அங்கீகாரத்தை இயக்குவதை நீங்கள் தேர்வு செய்யலாம்.

# வருடல் செய்யவும் ஸ்கேன் அம்சம்

**1** **Singpass ஐ துவக்கவும்**

உங்கள் மொபைல் சாதனத்தில் **“Singpass”** என்பதைக் கண்டுபிடித்து, தட்டவும்.

**2** **வருடல் செய்யவும் மீது தட்டவும்**




**3** **Singpass QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

கணினியின் உலாவியில் உள்நுழைவு பக்கத்தில் **QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**.


QR குறியீட்டுடன் உள்ள Singpass லோகோ மையத்தில் உள்ளவாறு உங்கள் ஃபோன் புகைப்படக்கருவியில் ஃபோகஸ் செய்யவும்.

# செய்தி பெட்டி இன்பாக்ஸ் அம்சம்


**1** **Singpass ஐ துவக்கவும்**

உங்கள் மொபைல் சாதனத்தில் **"Singpass"** என்பதைக் கண்டுபிடித்து, தட்டவும்.


**2** **செய்தி பெட்டி மீது தட்டவும்**




**3** **செய்தி பெட்டி பற்றிய கண்ணோட்டம்**





**4** **செய்தியை பின் செய்யவும்**




செய்தியை பின் செய்வதற்கு இடமிருந்து வலமாக ஸ்வைப் செய்யவும்.

## 5 செய்தியை நீக்கவும்





செய்தியை நீக்குவதற்கு வலமிருந்து இடமாக ஸ்வைப் செய்யவும்.

# குறிப்புகள்


# அமைப்புகள் - முக ஐடியை இயக்கி உங்கள் தனிப்பட்ட தகவல்களை மறைக்கவும்



## 1 அமைப்புகள் என்பதன் மீது தட்டவும்





## 2 முக ஐடியை ஆன் செய்யவும்




உங்கள் Singpass-ஐ அணுகுவதற்கு முக ஐடியைப் பயன்படுத்த, சுவிட்சைப் பச்சை நிறமாக மாற்ற, அதைத் தட்டவும்.


## 3 உங்கள் தனிப்பட்ட தகவலை மறைக்கவும்





உங்கள் தனிப்பட்ட தகவலை மறைக்க சுவிட்சைத் தட்டி அதனை பச்சை நிறமாக மாற்றவும்.

# அமைப்புகள் - மொழியை மாற்றுதல்


1 அமைப்புகள் என்பதன் மீது தட்டவும்





2 மொழியை மாற்றவும் என்பதைத் தேர்வு செய்யவும்




3 மொழியைத் தேர்வு செய்யவும்




## 4 விருப்பமான மொழியைத் தேர்வு செய்யவும்





# குறிப்புகள்

# அமைப்புகள் - செயலியின் கடவுக்குறியீட்டை மாற்றுதல்


**1** அமைப்புகள் என்பதன் மீது தட்டவும்





**2** செயலியின் கடவுக்குறியீட்டைத் தேர்வு செய்யவும்




**3** பழைய கடவுக்குறியீட்டை உள்ளிடவும்




4 **புதிய கடவுக்குறியீட்டை அமைக்கவும்**




# குறிப்புகள்

# பிற அரசாங்க சேவைகளை அணுகுதல்

## 1 துரிதவழியில் ஏதேனும் ஒன்றைத் தட்டவும்





அரசு வழங்கும் மற்ற சேவைகளில் உள்நுழைய, Singpass-இல் உள்ள துரிதவழிகளில் ஏதேனும் ஒன்றைத் தட்டவும்.


# Singpass ஐ மீட்டமைத்தல்

உங்களுக்கு உண்மையிலேயே தேவைப்பட்டால் மட்டுமே செயலியை மீட்டமைக்கவும்.


**1** அமைப்புகள் என்பதன் மீது தட்டவும்




**2** இந்தச் செயலியை மீட்டமைக்கவும் என்பதைத் தேர்வு செய்யவும்




**3** செயலியை மீட்டமைக்கவும்



# குறிப்புகள்

# குறிப்புகள்

**கூடுதல் தகவலுக்கு மற்றும் உங்கள் அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்க சமூக நடுவத்தைக் கண்டறிய:**

**IMDA தொடர்பு மையம்**

**ஹாட்லைன்:** +65 6377 3800
**கருத்தைத் தெரிவியுங்கள்:**
go.gov.sg/imda-feedback
**இணையத்தளம்:**
digitalforlife.gov.sg

**QR குறியீட்டை ஸ்கேன் செய்து வாழ்நாள் மின்னிலக்கமயத்திற்க்கு செல்லவும்**

© 2026 தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆதாரத்தின் எந்தப் பகுதியையும் IMDA வின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ நகலெடுக்கவோ கூடாது. இந்த வழிகாட்டியுடன் தொடர்புடைய ஆவணங்களின் பதிப்புரிமை பாதுகாப்பிற்கு உட்பட்டதாக இருக்கலாம். இவற்றுள் பின்வருபவையும் அடங்கும்: ஆவணங்கள், ஸ்லைடுகள், படங்கள், ஒலி மற்றும் காணொளி. காப்புரிமை பெற்ற பொருட்களை அங்கீகாரம் இல்லாமல் வைத்திருப்பது, நகல் எடுப்பது, விநியோகம் செய்வது அல்லது மாற்றியமைப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த ஆதாரவளமானது அரசு தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து (GovTech) சான்றுகளைப் பெறுகிறது.